அன்றன்றுள்ள **அப்பம்** வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

டிசம்பர் – 2023 | மரம் – 2 | கன்று – 12 | ஆண்டு சந்தா ரூ.250/- | தனிப்பிரதி ரூ.25/- | ஆயுள் சந்தா ரூ.2500/-



நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்;
நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்;
கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்;
அவர் நாமம்

**அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா,
வல்லமையுள்ள தேவன்,
நித்திய பிதா, சமாதானப்பிரபு**

என்னப்படும். ஏசாயா 9:6

ஆசிரியர். ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துறை

# மனதின் குரல்

## ஒலிவமரக் கன்றுகள் இதழின் வாசகர்களே! ஆதரவாளர்களே!

கிறிஸ்தவத்தின் வேரானது கிறிஸ்துவின் மீதான தீராத அன்பில் தான் மையம் கொண்டிருக்கிறது. அதன் கிளைகள் உயிர்மநேயம் கொண்டும் மனிதநேயம் கொண்டும், படைப்புகளின் மீது மலர் சொரியவேண்டும். மனிதத்தின் மையத்தில் புயலாய் மையம் கொண்டு சமுதாயக் கறைகளைக் கருணையின்றிக் கடக்கும் எந்தவொரு போதனையும் அதன் அர்த்தத்தைத் தொலைத்துவிடுகிறது.

ஆனால் கிறிஸ்தவம், அது எப்போதுமே அன்பின் அடிச்சுவடுகளில் பாதம் பதித்து அயலானின் கண்ணீர் ஈரம் துடைப்பதற்கு கைக்குட்டையோடு காத்திருக்கும் தெய்வீக தரத்தின் தொகுப்பு. பல்லுக்குப் பல் என்னும் பழி வாங்கல் கற்பித்தல்களிலிருந்து விலகி வாழ்வியல் எதார்த்தங்களின் கரம் பிடித்து சமுதாயத்தின் அடித்தட்டு மக்களின் வியர்வையும், குருதியும் கலந்த வேதனைப் பிசுபிசுப்பை துடைத்தெறியத் துடித்தவர் தான் நம் நண்பரும் தகப்பனுமாகிய இயேசு. ‘நீ வலக்கையால் செய்யும் தானம் இடக்கைக்குத் தெரியவேண்டாம்’ என்று அன்பின் ஆழத்தை அகலப்படுத்துகிறார் இயேசு.

எதிரியை நேசி - என்னும் அறிவுரையால் அன்பை ஆழப்படுத்துகிறார்,

இன்னும் இதயம் தொடும் ஏராளம் அறிவுரைகளை அளித்து அன்பை நீளப்படுத்துகிறார். இயேசுவின் போதனைகளை கைக்கொண்டு இயேசுவைப்போலவே உருமாற என் அன்பின் வாழ்த்துக்கள்.

இயேசு யார் என்பதை அறியாத மக்களுக்கு அவரை எளிமையாக அழுத்தமாக அறியவைக்க வேண்டும் என்னும் எண்ணமே இந்தப் படைப்பு உருவாகக் காரணம்.

இவ்விதழ் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்குமென்றால் அயலகத்திலுள்ள உங்கள் நண்பர்களுக்கும், தாயகத்திலுள்ள உங்கள் உறவுகளுக்கும் இவ்விதழை அறிமுகப்படுத்த உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

கிறிஸ்துமஸ் காலங்கள் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க நான் ஜெபிக்கிறேன்.

அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**





# கிறிஸ்துமஸ் மரம்

கிறிஸ்துமஸ் திருநாள் கொண்டாட்டத்தில் **கிறிஸ்துமஸ் மரம்** முக்கிய பங்கு வகிக்கின்றது. பொதுவாக பசுமைமாறா ஊசியிலை கூம்பு மரங்கள் வீட்டுகுள்ளேயோ வெளியேயோ நிறுத்தப்பட்டு கிறிஸ்துமஸ் விளக்குகளாலும் ஏனைய கிறிஸ்துமஸ் பொருட்களாலும் அழகூட்டப்படுகிறது. கிறிஸ்துமஸ் திருநாளுக்கு முந்தைய நாட்களில் இம்மரம் ஒளிவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு கிறிஸ்தவர்களின் வீடுகளில் வைத்திருப்பதைக் காணலாம்.

உலகிலேயே கிறிஸ்துமஸ் விழாவின் போது கிறிஸ்துமஸ் மரம் வைப்பது முதன்முதலில் ஜெர்மனியில்தான் தொடங்கியது. ஜெர்மனி, ஆஸ்திரியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் ஃபிர் என்ற மரத்தை அலங்கரிக்கும் வழக்கம் இருந்தது. நார்வேயில் ப்ரூஸ் மரத்தை வெட்டி கிறிஸ்துமஸ் மரமாக நட்டு, அதில் மெழுகுவர்த்தியால் அலங்காரம் செய்து ஏற்றி, நடுநடுவே ஆப்பிள் மற்றும் பழவகைகள், அலங்காரப் பொருள்கள் வைத்து குழந்தைகளுக்கு அவற்றைப் பரிசாக வழங்குவர். மின்சாரம் பிரபலமான பிறகுதான் மெழுகுவர்த்திக்குப்பதிலாக மின் விளக்குகள் பொருத்தப்பட்டன. அமெரிக்காவில் வெள்ளை மாளிகையில் வைக்கும் கிறிஸ்துமஸ் மரத்தை ப்ளூ ரூம் கிறிஸ்துமஸ் மரம் என அழைக்கின்றனர். வெள்ளை மாளிகையில் மொத்தம் 37 மரங்கள் வைக்கப்படுகின்றன.

சுமார் மூன்று கோடியே முப்பது இலட்சம் கிறிஸ்துமஸ் மரங்கள் வட அமெரிக்காவில் வருடந்தோறும் விற்கப்படுகின்றன. மூன்று இலட்சத்து முப்பதாயிரம் மரங்கள் இணையம் வழி விற்கப்படுகின்றன. கிறிஸ்துமஸ் மர வளர்ப்பில் ஓரகன், வட கொரோலினா, பென்சில்வேனியா, மிச்சிகன், வாஷிங்டன் மற்றும் விஸ்கான்சின் போன்ற மாநிலங்கள் முன்னணி மாநிலங்களாக உள்ளன. அமெரிக்காவின் எல்லா மாநிலங்களிலும், கனடாவிலும் கிறிஸ்துமஸ் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. சுமார் ஒரு இலட்சம் பணியாளர்கள் கிறிஸ்துமஸ் மரம் வளர்ப்பு தொழிலில் ஈடுபடுகின்றனர். பல வகையான கிறிஸ்துமஸ் மரங்கள் வளர்க்கப்படுகின்றன.

கிறிஸ்துமஸ் மரம் ஒவ்வொரு நாடுகளிலும் வேறுபடுகிறது. அந்தந்த நாடுகளில் முக்கோண வடிவில் வளரக்கூடிய மரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உலக அளவில் 16 வகையான கிறிஸ்துமஸ் மரங்கள் உள்ளன. இவற்றில் அதிகம் ஃபிர் (Fir tree) வகை மரங்களே பயன்படுத்தப்படுகிறது. இதுவே அந்த காலத்தில் ஓக் மரம் (Oak tree) என அழைக்கப்பட்டது. பிர் வகை என்றால் ஊசி இலை கொண்ட முக்கோண வடிவ பசுமையான மரங்கள். அவை ஆண்டு முழுவதும் இலைகளை வைத்திருக்கின்றன.

- பால்சம் ஃபிர் (Balsam Fir)
- கானான் ஃபிர் (Canaan Fir)
- கிராண்ட் ஃபிர் (Grand Fir)
- கான்கலர் ஃபிர் (Concolor Fir)
- ஸ்காட்ச் பைன் (Scotch Pine)
- நீல தளிர் (Blue Spruce)
- வெள்ளை தளிர் (White Spruce)
- லேலண்ட் சைப்ரஸ் Leyland Cypress
- ஃப்ரேசர் ஃபிர் (Fraser Fir)
- டக்ளஸ் ஃபிர் (Douglas Fir)
- நோபல் ஃபிர் (Noble Fir)
- வெள்ளை பைன் (White Pine)
- வர்ஜீனியா பைன் (Virginia Pine)
- நார்வே ஸ்ப்ரூஸ் (Norway Spruce)
- அரிசோனா சைப்ரஸ் (Arizona Cypress)
- சிவப்பு சிடார் Red Cedar

இத்தனை வகை கிறிஸ்துமஸ் மரம் இருந்தாலும் Noble fir, Fraser fir and Balsam fir tree இந்த மூன்று வகை மரங்களே அதிகம் கிறிஸ்துமஸ் தினத்தில் பயன்படுத்தப்படுகிறது.

கிறிஸ்துமஸ் மரத்தை வளர்க்க முடியாதவர்கள் செயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட கிறிஸ்துமஸ் மரத்தை பயன்படுத்துகின்றனர். செயற்கை கிறிஸ்துமஸ் மரங்களுக்கான தயாரிப்பில் கொரியா, தைவான் மற்றும் ஹாங்காங் போன்ற நாடுகள் முன்னணியில் நிற்கின்றன.

தேவன், தம் மக்களை பாவம் என்னும் இருளில் இருந்தும், அடிமை வாழ்வில் இருந்தும் விடுவிக்க தொடக்க காலம் முதல் பல தீர்க்கதரிசிகள் வழியாக முயற்சித்தார். எளிய முறையில் குழந்தை வடிவில் பிறந்த தேவன், அவரிடம் இருக்கின்ற வாழ்வு தான், இன்று மனிதர்களாகிய நம் அனைவருக்கும் ஒளியாக விளங்குகிறது. தேவன் மனிதராக பிறந்தது மானிட குலத்துக்கு மாபெரும் கொடையாக அமைந்துள்ளது.

மனுகுலம் பாவத்தில் இருந்து முழு விடுதலைபெற வேண்டும் என்பதே இயேசு கிறிஸ்து பிறப்பின் நோக்கமாக இருந்தது. இயேசு என்ற பெயருக்கு பாவத்தில் இருந்து விடுதலை அளிப்பவர், அதாவது மீட்பர் என்று பொருள். இயேசு பிறந்தார் என்ற செய்தி இவ்வுலகில் முதன் முதலாக ஆடுகளை வயல் வெளியில் மேய்த்துக் கொண்டிருந்த மேய்ப்பர்களுக்கு, தேவதூதரால் அறிவிக்கப்பட்டது.

ஏழைகளுக்கு காட்சியளிப்பவராய், ஏழ்மையின் கோலமாய், தாழ்மையின் வடிவில் அனைத்து ஏழை-எளிய மக்களோடு ஒன்றிணைந்து வாழ அறைகூவல் விடுக்கிறது. இப்படிப்பட்ட வாழ்வே இம்மண்ணில் நமக்கு முழுமையான மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் அனுதினமும் அருளிச்செய்யும்.

'உன்னை நீ அன்பு செய்வது போல உன் அயலானையும் அன்பு செய்' என்று இயேசு சொன்னதோடு மட்டுமல்லாமல் வாழ்ந்தும் காட்டினார். இயேசு கிறிஸ்து நம்மோடு இருக்கிறார் என்பதை உணர்ந்து வாழ வேண்டும். அவ்வாறு வாழ்கிற போது நம்மால் தேவனின் விண்ணுலகை அடைய முடியும்.

பொருளாதாரத்தை இழந்து வறுமையில் வாழ்வை எதிர்கொள்ள முடியாமல் கலங்கி நிற்கும் மக்களின் அச்சம் அகன்று ஆறுதல் பெறவும், இழப்பை மறந்து மீட்பு பெற, இயலாமை என்பது இல்லாமல் போக எல்லோரும் எல்லாமும் பெற்று இன்புற அவர்களோடு உடனிருப்போம், அன்பு செய்வோம், ஆறுதல் கூறுவோம். கிறிஸ்து பிறப்பின் நோக்கத்தை நம் வாழ்வில் கடைபிடித்து செயல்படுவோம். உலக மீட்பர் பாலன் இயேசுவின் அன்பும், அமைதியும், அருளும், ஆசியும் உங்கள் அனைவரோடும் என்றும் தங்குவதாக.

## இந்திய கிறிஸ்துமஸ் மரம்:

இந்தியாவில் அரக்குவாகரியா கொலம்னரிஸ் (Araucaria Columnaris) என்ற ஆஸ்திரேலிய வகை மரம் கிறிஸ்துமஸ் மரமாக பயன்படுத்தப்படுகிறது. இந்த மரம் கிடைக்காதவர்கள் சவுக்கு (Casuarina) மரத்தை கிறிஸ்துமஸ் குடில் அருகில் வைப்பார்கள்.

## ஜெர்மனி - அமெரிக்கா கிறிஸ்துமஸ் மரம்:

அமெரிக்க நாடுகளிலும் ஃபிர் (Fir tree) வகை மரங்கள் கிறிஸ்துமஸ் மரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## இங்கிலாந்து கிறிஸ்துமஸ் மரம்:

United Kingdom நாடுகளில் நார்வே ஸ்ப்ருஸ் (Norway Spruce) வகை மரங்கள் கிறிஸ்துமஸ் மரமாகப் பயன்படுத்தப்படுகிறது.

## ஆஸ்திரேலிய கிறிஸ்துமஸ் மரம்:

வெஸ்டன் ஆஸ்திரேலியாவில் நியூட்ஸ்யா (Nuytsia) என மஞ்சள் நிற இலைகள் கொண்ட மரம் கிறிஸ்துமஸ் மரமாக கொண்டாட்டங்களில் பயன்படுத்தப்படுகிறது.



இந்திய கிறிஸ்துமஸ் மரம்



ஜெர்மனி - அமெரிக்கா கிறிஸ்துமஸ் மரம்



இங்கிலாந்து கிறிஸ்துமஸ் மரம்



ஆஸ்திரேலிய கிறிஸ்துமஸ் மரம்

**கிறிஸ்துமஸ் தாத்தா குழந்தைகளுக்கு பரிசுகளை கொடுப்பதற்குச் செல்ல சரியான வழிகாட்டுங்கள்.**



தொடர்கதை

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

இயேசு ஏரோதின் முன்னிலையில் நிறுத்தப்பட்டார்.

ஏரோது இயேசுவைக் கண்டதும் மகிழ்ந்தான். இயேசு எருசலேம் நகரில் மிகவும் பிரபலமடைந்திருந்ததால் ஏரோது இயேசுவைப்பற்றி அதிகம் கேள்விப்பட்டிருந்தான். எப்படியாவது இயேசுவைக் காணவேண்டும், அவருடைய அற்புதங்கள் சிலவற்றைக் கண்ணால் காணவேண்டும் என்று அவன் ஆசைப்பட்டிருந்தான்.

ஏற்கனவே ஏரோதை இயேசு ‘குள்ள நரி’ என்று அழைத்திருந்தார். ஏரோது மன்னன் யோவான் ஸ்நானனை கொலை செய்ததால் அவருடைய ஆதரவாளர்களின் கோபம் ஏரோதின் பக்கம் இருந்தது. அதன் பின் இயேசுவும் ஏரோதை குள்ள நரி என்று அழைத்தபின் இயேசுவின் ஆதரவாளர்கள் அனைவருமே மறைமுகமாக ஏரோதுக்கு விரோதமாகவே இருந்தார்கள். இப்போது இயேசுவை யோவான் ஸ்நானனின் சீடர்கள் ஆதரிக்கிறார்கள். அவர்களில் பலர் யோவான் ஸ்நானன் தான் இயேசுவாக உலவுவதாகவும் நம்பினார்கள். ஏரோதும் அந்த நம்பிக்கை கொண்டிருந்தான்!

‘நீர் தான் இயேசுவா...’ ஏரோது நகைப்புடன் கேட்டான். இயேசு மௌனமாய் இருந்தார்.

‘நீ நிறைய அற்புதங்கள் செய்தாயாமே.. கொஞ்சம் செய்து காட்டு பார்ப்போம். எனக்கும் பொழுது போகும்’ ஏரோது சிரித்தான்.

கூட வந்திருந்த வேதபாரகர், ஆசாரியர்கள் எல்லோரும் இயேசுவின் மேல் குற்றம் சுமத்திக் கொண்டே இருந்தார்கள்.

இயேசு எதற்கும் பதில் சொல்லவில்லை.

‘நீ செத்தவனை உயிர்ப்பித்தாயாமே? இங்கே உயிரோடு இருக்கும் யாரையாவது செத்துப் போகச் செய் பார்க்கலாம்’.

‘பிசாசைத் துரத்தினாயாமே... உன் கைகளைக் கட்டியிருக்கும் சங்கிலியை உடைத்துவிடு பார்க்கலாம். என்ன தேவகுமாரனை சங்கிலியால் கட்டமுடியுமா?’ ஏரோதின் ஏளனப் பேச்சுகள் கூட்டத்தினரை ஆரவாரம் செய்ய வைத்தன.

ஏரோது எப்படியேனும் இயேசுவை வைத்து சில அற்புதச் செயல்களைச் செய்து காட்ட வைத்து பொழுதைப் போக்க வேண்டும் என்று நினைத்தான். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.

‘இவன் தேவகுமாரனல்லவா? இவனுக்கு ஒரு நல்ல பட்டாடையை உடுத்துங்கள்’ ஏரோது சொல்ல படைவீரர்கள் அவருக்குப் பட்டாடை ஒன்றை அணிவித்தார்கள்.

‘அரசே வாழ்க...’ ஏரோது மன்னன் போலியாக இயேசுவின் முன்னால் குனிந்தான்.

இயேசு அவர்கள் முன்னிலையில் ஓர் ஏளனச் சின்னமாக நின்றார். இயேசுவின் பொறுமையும் அமைதியும் ஏரோதின் மனதைக் குழப்பின. ஒருவேளை இவர் தீர்க்கதரிசியாக இருப்பாரோ? என்னும் குழப்பம் அவருக்குள் எழுந்தது. நமக்கு ஏன் வம்பு என்று ஏரோது நினைத்தான்.

‘இதோ... இவனை பிலாத்துவிடமே கூட்டிக் கொண்டு போங்கள். அவர் சொல்லும் தண்டனையை இவருக்கு வழங்குங்கள்’ ஏரோது சொன்னான்.


‘என்ன பிலாத்துவிடமா? மீண்டுமா? இவன் கலிலேயன் ஆனதனால் நீங்கள் தான் இவருக்குத் தண்டனை வழங்க வேண்டும்’ அன்னா குறுக்கிட்டான்.

‘இவன் கலிலேயனாய் இருந்தாலும் இவனுடைய செயல்களெல்லாம் யூதேயா எங்கும் தான் நடந்திருக்கிறது. அவனை நீங்கள் கைது செய்தது கூட பிலாத்துவின் ஆளுகைக்கு உட்பட்ட எருசலேமில் தானே. எனவே பிலாத்துவிடமே இவனைக் கொண்டு செல்லுங்கள். இவனுக்கு நீங்கள் என்ன தண்டனை வழங்கினாலும் அதில் எனக்கு ஆட்சேபனை இல்லை’ ஏரோது சொல்ல அன்னா பெருமூச்சு விட்டான்.

‘ம்ம்.. ஆகட்டும்.. ராஜாவை இழுத்துச் செல்லுங்கள்.. வீரர்களே அவர் ராஜா.. மரியாதை செலுத்தி அழைத்துச் செல்லுங்கள்’ என்று ஏரோது ஏளனமாய் சிரித்துக் கொண்டிருந்தான்.

இயேசுவும் கூட்டத்தினரும் வெளியேறியதும் ஏரோதின் மனதுக்குள் பொறி தட்டியது. அவனுடைய புருவங்கள் விரிந்தன. கண்களில் திகில் படர்ந்தது.

மூன்று ஆண்டுகளுக்கு முன் இயேசுவைக் கொல்ல ஏரோது மன்னன் முயன்றபோது இயேசு சொல்லியிருந்தார். எருசலேமில் தான் தன்னுடைய மரணம் நிகழும் என்று. எப்படி மூன்று ஆண்டுகளுக்குப் பின் நடப்பதை அவரால் அத்தனை சரியாய் சொல்ல முடிந்தது? ஏரோது ராஜாவிடம் அதுவரை இருந்த சிரிப்பு மறைந்துவிட்டிருந்தது. பயமும் திகிலும் அவனுடைய முகத்தை அப்பின. கூட்டம் இயேசுவைக் கூட்டிக் கொண்டு மீண்டும் பிலாத்துவின் மாளிகைக்கே வந்தது.



‘இவனுக்கு நீர் தான் தண்டனை வழங்க வேண்டுமாம். என்ன தண்டனை வேண்டுமானாலும் வழங்கலாம் என்று ஏரோது அனுமதி வழங்கியிருக்கிறார்’ அன்னா சொன்னார்.

பூமராங் போல தன்னை நோக்கியே மீண்டும் வந்த வழக்கைக் கண்டு பிலாத்து வருந்தினான். அவன் அன்னாவை அழைத்தான்.

‘இதோ.. இந்த மனிதனிடத்தில் நீங்கள் சாட்டும் குற்றச்சாட்டுகள் எதையும் நான் காணவில்லை.’

‘இல்லை. இவன் குற்றவாளிதான். இதோ, இத்தனை மக்கள் கூறுகிறோமே. எங்கள் தலைமைச் சங்கத்திலும் முடிவாகி விட்டது இவன் குற்றவாளி தான்’ அவர்கள் கத்தினார்கள்.

‘நீங்கள் தான் சொல்கிறீர்கள். ஆனால் என்னுடைய விசாரணையிலோ, ஏரோது ராஜாவின் விசாரணையிலோ எதுவும் தெரியவில்லை. எனவே இவனைத் தண்டித்து விடுவிப்பேன்’ பிலாத்து சொன்னான்.

‘விடுவிப்பதா? முடியாது. இவன் மரணதண்டனை அனுபவிக்க வேண்டும்’ அவர்கள் உறுதியாய்ச் சொன்னார்கள்.

‘மரண தண்டனையா? சாவுக்குரிய தண்டனை ஏதும் இவனிடம் நானோ, ஏரோது ராஜாவோ காணவில்லை. எனவே இவனை சித்திரவதை செய்து விடுவிப்பேன். எனவே மீண்டும் இப்படி ஒரு தவறை இவன் செய்யமாட்டான்’ பிலாத்து சொன்னான்.

அன்னாவும், காய்பாவும் மக்களிடையே இயேசுவைக் கொல்லவேண்டுமெனக் கத்துங்கள் என்று தூண்டினார்கள். அவர்களுக்குத் தேவையானவற்றைக் கொடுப்பதாக வாக்களித்தார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக நின்ற இயேசுவின் ஆதரவாளர்களை அவர்கள் கூட்டத்துக்கு வெளியே தள்ளினார்கள்.

பிலாத்து மீண்டும் இயேசுவை விசாரித்தான்.

திடீரென பிலாத்துவுக்கு ஒரு யோசனை. அவர்களுடைய வழக்கப்படி பஸ்கா விழாவின் போது கைதி ஒருவரை விடுதலை செய்யலாம். குறைந்த குற்றம் செய்த ஒரு மனிதனை விடுதலை செய்வது வழக்கம். அப்போது சிறையில் அதிபயங்கரக் கொலை குற்றவாளி ஒருவன் இருந்தான். அவன் பெயர் பரபாஸ். அவன் ரோம அரசுக்கு எதிராக பலத்த கலகம் செய்தவன். பல கொலைக் குற்றங்களும் அவனுடைய பெயரில் உண்டு.

அவனோடு ஒப்பிட்டால் இயேசு செய்ததாகச் சொல்லப்படுபவையெல்லாம் வெறும் சாதாரண குற்றங்கள் தான். எனவே பரபாசை விடுதலை செய்யவா இயேசுவை விடுதலை செய்யவா என்று கேட்போம். மக்கள் கண்டிப்பாக இயேசுவைத் தான் கேட்பார்கள் என்று பிலாத்து நினைத்தான். அவனுடைய முகத்தில் ஒரு மெல்லிய புன்னகை பிறந்தது.

‘அமைதி.. அமைதி..’ பிலாத்து மக்கள் முன்னிலையில் எழுந்து நின்றான்.

கூட்டம் அமைதியானது.

‘உங்களுக்கு நான் ஒரு கடைசி வாய்ப்பு தருகிறேன். நல்ல முடிவு எடுங்கள். பஸ்கா விழாவை முன்னிட்டு நான் ஒரு கைதியை விடுதலை செய்யப் போகிறேன். நன்றாகக் கேளுங்கள். பரபாஸ் என்னும் கொலையாளியைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். மாபெரும் கலகக்காரன். கொலையாளி. அவனை நான் விடுதலை செய்வதா? இதோ இந்த குற்றமற்ற இயேசுவை விடுதலை செய்வதா? சொல்லுங்கள்’ பிலாத்து கேட்டான்.

‘பரபாசை..’ கூட்டத்தினரைக் கத்த வைத்தனர் கூட்டத்தில் கலந்திருந்த ஆசாரியர்களின் ஆதரவாளர்கள்.

‘என்ன பரபாசையா? அவன் எப்படிப்பட்ட குற்றவாளி தெரியுமா? அவனையா விடுதலை செய்யவேண்டும்’ பிலாத்து மீண்டும் கேட்டான்.

‘ஆம். பரபாசை விடுதலை செய்தால் போதும். இயேசுவை விடுவிக்க வேண்டாம்’ கூட்டம் கத்தியது.

பிலாத்து குழம்பினார். ‘அப்படியானால் உங்கள் இயேசுவை நான் என்ன செய்வது?’

கூட்டத்தினர் ஒருவினாடி மௌனமானார்கள்.

‘சிலுவையில் அறையும்’ ஒரு குரல் ஓரமாய் ஒலித்தது. அந்த ஒலியைப் பிடித்துக் கொண்டே பல ஒலிகள் உயர்ந்தன. சில வினாடிகளில் கூட்டத்தினர் ஒரே குரலில் கத்தத் துவங்கினார்கள்.

‘சிலுவையில் அறையும்..’

‘சிலுவையில் அறையும்..’

‘சிலுவையில் அறையும்..’

‘சிலுவையில் அறையுமளவுக்கு இவன் செய்த தவறு என்ன?’ பிலாத்துவின் கேள்வியைக் எதிர்கொள்ளும் மனநிலையில் அவர்கள் இல்லை. அவர்கள் விடாமல் கத்திக் கொண்டே இருந்தார்கள்.

‘சிலுவையில் அறையும்..’

‘சிலுவையில் அறையும்..’

‘சிலுவையில் அறையும்..’

பிலாத்து தளர்ந்து போய் ஆசனத்தில் அமர்ந்தான்.

‘இவனைக் கொண்டு போய் சித்திரவதை செய்து கூட்டி வாருங்கள்’ பிலாத்து அரைமனதுடன் ஆணையிட்டான்.

தொடரும்...




கிறிஸ்துவின் பணியில் ஆதரவு கரம் நீட்ட விரும்பினால் காசோலை (Cheque) அல்லது வரைவோலை / கேட்புக் காசோலை (D.D.) கீழ்க்கண்ட பெயரில் எடுத்து, எங்களது அலுவலக முகவரிக்கு பதிவஞ்சல் (Register Post) / தூதஞ்சலில் (Courier) அனுப்புங்கள். கூடுதல் தகவலுக்கு:

✆ 9003067777


G Pay 98406 95296

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | **ANTANTULLA APPAM TRUST** |
| ACCOUNT NO. | : | 048 201 000 010 247 |
| BANK NAME | : | **INDIAN OVERSEAS BANK** |
| IFSC CODE | : | IOBA0000482 |
| SWIFT CODE | : | IOBAINBB001 |
| BRANCH & CODE | : | MAHALINGAPURAM BRANCH & 482<br>CHENNAI - 600 034. |


# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)





அல்லேலூயா, கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. (சங்கீதம் 106:1)




(இயேசு கிறிஸ்து) அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது. (கொலோசெயர் 2:3)




பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக. (ரோமர் 15:13)




உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்! (மத்தேயு 6:23)

# மேய்ப்பர்களுக்கு நற்செய்தி

நமது ஆண்டவராகிய இயேசு பிறக்கும்போது தேவதூதர்களின் சேனை இவ்வாறு துதிபாடினார்கள். ''உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக'' (லூக். 2:14).

இந்த தூதர்களின் துதியானது பூரணமான தேவனுடைய வாக்குத் தத்தமாகும். இந்தச் செய்தியை இரண்டு பிரிவுகளாக தியானிக்கப் போகிறோம். மேய்ப்பர்களைப் பற்றியும் தூதர்களின் துதிபாடல்களைப் பற்றியும் அறியப்போகிறோம். கிறிஸ்து பிறந்த அன்று தேவதூதன் மேய்ப்பர்களுக்கு தரிசனமாகி பிறப்பின் செய்தியையும் அவரின் பிறப்பிடத்தையும், நோக்கத்தையும் கூறுகின்றான். அப்போது தேவதூதர்களின் பாடலின் வாக்கியத்தைத்தான் லூக். 2:14இல் காண்கிறோம். இயேசு மாட்டு தொழுவத்தில் பிறந்தார் என்பதை மேய்ப்பர்கள் மட்டுமே முதலாவது கண்டனர்.

மேய்ப்பர்களின் பணி கடினமான பணியாகும். இப்பணி செய்வோர் இரவும்பகலும் விழித்து இருக்கவேண்டும். இது மனிதர்களால் அற்பமாய் எண்ணப்பட்டப் பணியாகும். எகிப்தியர்கள் மேய்ப்பர்களை அற்பமாய் எண்ணினார்கள் (ஆதி. 46:34).

### அ. பாக்கியம் பெற்றவர்கள்

இந்த மேய்ப்பர்களுக்கு கிறிஸ்துவின் பிறப்பின் செய்தி தூதர்களால் அறிவிக்கப்பட்டது. அந்நாட்களில் தேவதூதர்களைக் காணவும், தேவ வெளிப்பாட்டைக் காணவும் ஜனங்கள் காத்திருந்தனர். கர்த்தரின் வாக்கும் தரிசனமும் ஜனங்களுக்கு கிடைப்பது அரிதாய் இருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நினையாத வேளையில், எதிர்பாராத நிகழ்ச்சியாக மேய்ப்பர்களுக்கு தூதனின் செய்தியும், தூதர்களின் பாடலும், தெய்வீக குழந்தையைப் பார்க்கும் சிலாக்கியமும் இவர்களுக்கு கிட்டியது. பாக்கியங்கள் பெற்ற பாக்கியவான்கள் என்றே இவர்களைக் கூறலாம். கிறிஸ்துவின் பிறப்பு மேய்ப்பர்களுக்கும், கிழக்கில் இருந்து வந்த சாஸ்திரிகளுக்கும் கூறப்பட்டது. ராஜாக்களுக்கும், ஞானிகளுக்கும், ஏழ்மையில் உள்ளவர்களுக்கும் கூறப்பட்ட செய்திதான் கிறிஸ்துவின் பிறப்பின் செய்தியாகும்.

நமது கர்த்தராகிய இயேசு சகல ஜனங்களுக்கும் நல்மேய்ப்பராய் இருப்பதினால், மேய்ப்பர்களுக்குக் கூறப்பட்டதோ என்றும்கூட எண்ணலாம். பிரியமானவர்களே! கிறிஸ்துவின் பிறப்பின் செய்தியைக் கேள்விப்படுகிற அனுபவிக்கிற, அறிவிக்கிற ஜனங்கள் பாக்கியங்கள் பெற்ற பாக்கியவான்கள் எனலாம்.

### ஆ. பணிவுடன் கீழ்ப்படிந்தவர்கள்

தேவ தூதனின் செய்தி என்னவெனில், ''இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்'' (லூக் 2;10,11) என்று. கிறிஸ்துவின் பிறப்பின் செய்தி எல்லா ஜனத்திற்குமுரிய செய்தி மட்டுமல்ல, இது மேய்ப்பர்களுக்குமுரிய செய்தியாகும். 'காண்பீர்கள்' என்று கூறப்பட்டுள்ளதே தவிர, 'போங்கள்' என்றோ அல்லது 'போய்ப் பாருங்கள்' என்றோ கூறப்படவில்லை. செய்தியின் உட்கருத்தை அறிந்து இவர்கள் உடனடியாக கீழ்ப்படிந்து கிறிஸ்துவைக் காணச்சென்றார்கள். நமது வாழ்வில் இத்தகைய கீழ்ப்படிதல் உண்டா? நாம் அறிந்துகொண்ட உண்மைகளுக்கு நாம் கீழ்ப்படிவோமாக!



### இ. பிரசித்தம் பண்ணினார்கள்

மேய்ப்பர்கள் தாங்கள் கேட்ட, கண்ட செய்தியினைப் பிரசித்தம் பண்ணினார்கள். பிறப்பின் செய்தி மறுக்கப்பட வேண்டிய மறைக்கப்பட வேண்டிய செய்தியல்ல. இச்செய்தி அறிவிக்கப்படவேண்டிய செய்தியாகும். கிறிஸ்துவின் முதல் வருகையை மேய்ப்பர்கள் அறிவித்தார்கள். நாமோ கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்து கொண்டு இருக்கிறோம். இருப்பினும் முதலாம் வருகையைக் கேள்விப்படாத எத்தனையோ மக்கள் கூட்டங்கள் உண்டே! அறிவிக்கும் பணியினைச் செய்ய முன்வருபவர்கள் யார்? இந்த மேய்ப்பர்களோ கிறிஸ்துவின் மகிமை எங்கும் பரவும்படி அறிவித்து பிரசித்தம் பண்ணினார்கள்.

## தூதர்களின் துதி

### அ. கிறிஸ்துவின் பிறப்பு உன்னதத்தில் இருக்கிற தேவனுக்கு மகிமையைக்கொண்டு வருகின்றது (1தீமோ. 1:1).

பாவிகளை இரட்சிக்க இயேசுகிறிஸ்து உலகத்தில் வந்தார். ஒரு பாவி மனந்திரும்பு வானானால் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகும். பாவிகள் மனந்திரும்பவே கிறிஸ்து பிறந்தார். கிறிஸ்துவின் பிறப்பு பாவிகளின் மீட்புக்கு ஒரே வாசலாகும். கிறிஸ்துவின் பிறப்பு பரலோகத்தில் களிப்பையும் மகிமையையும் கொண்டு வந்தது (லூக். 15:10).

### ஆ. கிறிஸ்துவின் பிறப்பு பூமியிலே சமாதானத்தை உண்டுபண்ணியது (எபேசி. 2:14-17).

தேவனுக்கும் மனுக்குலத்துக்கும், மனிதர்களுக்கிடையே இருந்த பிரிவினைக்குட்பட்ட உறவுகள் கிறிஸ்துவினால் செம்மையாக்கப்பட்டது. பிரிவினை அகன்றுபோனது. சமாதானம் இல்லாத பூமியில் சமாதான பிரபு பிறந்ததால் பூமியில் சமாதானம் வந்தது.

### இ. கிறிஸ்துவின் பிறப்பு மனுஷர்மேல் பிரியம் உண்டாக்கிற்று (1யோவான் 4:9)


மனிதர்களையும், பூமியையும் நேசித்ததினால் தேவன் தமது குமாரனை உலகுக்கு அனுப்பியதால் மனுஷர் மேல் வைத்த தேவ அன்பு - பிரியம் உண்டாயிற்று.

பிரியமானவர்களே! கிறிஸ்துவின் பிறப்பு மகிமையையும், சமாதானத்தையும், அன்பையும் வெளிப்படுத்தியது. இதனை உணர்ந்தவர்களாக நாம் கிறிஸ்துவை ஆராதிப்போம். நமது கொண்டாட்டங்களில் கிறிஸ்துவின் சிந்தையைக் காத்துக்கொள்வோமாக!



# ஜிங்கிள் பெல்... ஜிங்கிள் பெல்...

**1-20 புள்ளிகளை இணைத்து அழகான வண்ணம் தீட்டவும்.**



# சிமியோன்

உங்கள் வாழ்வின் ஓட்டத்தை நீங்கள் எப்படி முடிக்கவிரும்புகிறீர்கள்? உங்கள் வாழ்வில் எதனை சாதிக்க விரும்புகிறீர்கள்? நீங்கள் மரிக்கும்போது தேவன் என் வாழ்வில் வைத்திருந்த இலக்கை அடைந்தேன், என் பணியை நிறைவுசெய்தேன், இனி நான் மரிக்கத் தயார் என்று கூறும்விதமாக இவ்வுலக வாழ்வை முடிக்க விரும்புகிறீர்களா? சிமியோனின் வாழ்வில் உங்களுக்கும் ஓர் செய்தியுண்டு.

நான் ஆண்டவருக்காக காரியங்களை செய்ய ஆசையுண்டு. ஆனால் எனக்கு வயது போய்விட்டது. உடல் பெலவீனமாகிவிட்டது. இனி என்னால் ஏது செய்யமுடியும் என்கிறீர்களா? உங்களுக்கும் சிமியோனின் வாழ்விலிருந்து ஒரு செய்தியுண்டு.

## 1. ஆண்டவரின் ஆவியினால் நடத்தப்பட்டவர்

''அப்பொழுது சிமியோன் என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான்; அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும், இஸ்ரவேலின் ஆறுதல்வரக் காத்திருக்கிறவனாயும் இருந்தான்; அவன்மேல் பரிசுத்த ஆவி இருந்தார்'' (லூக். 2:25).

''கேட்டல்'' என்ற அர்த்தமுடைய பெயரைக் கொண்ட சிமியோன் என்ற மனிதர் எருசலேமில் இருந்தார். சிமியோன் பரிசுத்த ஆவியின் ஏவுதலால் தேவாலயத்திற்கு வந்திருந்ததாக 27ஆம் வசனத்தில் காண்கிறோம். அது மட்டுமல்ல, ''கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது'' (லூக்.2:26). ஆவியானவர் அவர்மேல் இருந்தார், அவருக்கு வார்த்தை கொடுத்தார். ஆலயத்திற்கு வரும்படி ஏவினார். ஆம், சிமியோன்



ஆண்டவரின் ஆவியானவரால் நடத்தப்பட்டார். ஆவியானவரிடமிருந்து வார்த்தையைப் பெற்றார்.

சிமியோன் நீதிமானாய் மாத்திரமல்ல, தேவ பக்தியுள்ளவருமாயிருந்தார். தேவபக்தியுள்ளவராயிருந்தார் என்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கிரேக்கச்சொல் நற்பெயருள்ள, நன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்ட என்ற அர்த்தம் தருகிறது. எனவே சிமியோன் நற்சாட்சியுள்ளவராயிருந்தார். இன்று கிறிஸ்தவர்கள் பலர் நற்சாட்சியை இழந்து காணப்படுவது வேதனைக்குரியது. கடன் வாங்கினால் திருப்பிக் கொடுப்பதில்லை, பக்கத்து வீட்டுக்காரர்களோடு அல்லது அலுவலகத்தில் பக்கத்து இருக்கையில் இருப்பவரோடு எப்பொழுதுமே சண்டை, போட்டி பொறாமை, நற்பெயரை இழந்து சாட்சிகெட்டு வாழ்பவர்கள் பலர். நாம் நற்கிரியையுள்ளவர்களாக இருக்கவேண்டும். நமக்குத் தேவனோடுள்ள உறவு, தேவ பக்தி மற்ற உறவுகளில் வெளிப் பட வேண்டும். சிமியோன் நம்பியதை நடத்தையில் காட்ட முற்பட்டவர். மற்றவர் முன்னிலையில் தேவமனிதனாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்.

### 2. ஆண்டவரின் வார்த்தையை பெற்றவர்.

''கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது'' (லூக்.2:26). சபை மக்களுக்கூடாக, தேவ மனிதருக்கூடாக, சூழ்நிலைகளுக்கூடாக, ஜெபத்தில் காத்திருக்கும்போது, வேத வசனங்களை வாசிக்கும்போது கேட்கும்போது அவர் பேசுகிறார். சிலவேளைகளில் ஆவியானவர் மனதில் ஒரு பாரத்தை ஏற்படுத்தி அதற்கூடாகப் பேசலாம். ஆனால் இவை அனைத்தையும் நாம் தேவ வசனத்தைக்கொண்டு சோதித்துப்பார்க்க வேண்டும். மனிதர்கள் தவறிவிடக்கூடியவர்கள், சூழ்நிலைகள்கூட நம்மை ஏமாற்றலாம். எனவே தேவ வசனத்தில் தங்கியிருப்பது அவசியம். தேவசித்தத்திற்கு கீழ்ப்படிய மனதாய், தேவ வசனத்தைக் கேட்கும்போது, வாசிக்கும்போது ஆண்டவர் பேசுவதை நாம் உணர்கிறோம். வசனத்தை வாசிக்கும்போது திடீரென ஒரு குறிப்பிட்ட வசனம் நம் கவனத்தை ஈர்க்கலாம். அதனூடாக ஆண்டவர் பேசலாம்.

### 3. அசையாத ஒரே இலட்சியத்தோடு வாழ்ந்தவர்

சிமியோனின் ஒரே இலட்சியம், கனவு ஆண்டவர் வாக்குப்பண்ணிய கிறிஸ்துவைக் காண்பது, மேசியாவைக் காண்பது என்பதேயாகும். ஆண்டவரின் இந்த வாக்குத்தத்தம் நிறைவேற சிமியோன் பல வருடங்கள் நம்பிக்கையோடு காத்திருந்தார். அவரது சரீரம் செத்துக் கொண்டிருந்தாலும் அவர் நம்பிக்கை செழித்துக் கொண்டிருந்தது. அந்த இலட்சியத்திற்காகவே அவர் வாழ்ந்தார். அதில் மாத்திரமே கண்ணோக்கமாயிருந்தார்.

### 4. ஆண்டவரின் சந்தோஷத்தால் நிறைந்தவர்.

பல வருடங்களாக ஒரு காரியத்திற்காக ஜெபித்து இருபது முப்பது அல்லது நாற்பது வருடங்கள் காத்திருப்புக்குப் பின்பு அது நிறைவேறும்போது உங்களுக்கு எத்தகைய மகிழ்ச்சி உண்டாகும். சிமியோன் பலவருடங்கள் காத்திருந்த காரியம் கைகூடியது. இஸ்ரவேலர் பல நூற்றாண்டுகளாக மேசியாவை எதிர்பார்த்திருந்தனர். ஆனால் பலர் அவரை அரசியல் ரீதியான மேசியாவாக தங்களை அந்நிய நாட்டு அடிமைத்தனத்திலிருந்து மீட்கும் அரசியல் ரீதியான மேசியாவாகவே நோக்கினார்கள். ஆனால் சிமியோன் போன்ற சிலர் மேசியாவின் உண்மையான நோக்கமறிந்து பொறுமையோடு நம்பிக்கையோடே காத்திருந்தனர்.

சிமியோன் ஆவியானவரால் நடத்தப்பட்டு ஆண்டவரின் வார்த்தையை பெற்றுக்கொண்டது மட்டுமல்ல, அந்த வார்த்தையை மற்றவருக்கும் அறிவித்தார்.

சிமியோன் பல வருடங்களாக காத்திருந்த மேசியாவைக் கண்டபோது அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ''அவன் அவரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, தேவனை ஸ்தோத்திரித்து: ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்'' (லூக்.2:28,29).

சிமியோன் தன் வாழ்வின் இலட்சியத்தை அடைந்த மகிழ்ச்சியில் இப்பொழுது மரணத்தைக்கூட சமாதானத்தோடு சந்திக்க ஆயத்தத்தோடு ஆண்டவரை புகழ்ந்து பாடுகிறார். ''புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம் பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்'' (லூக்.2:30-32).

## 5. ஆண்டவரின் வார்த்தையை அறிவித்தவர்.

''பின்னும் சிமியோன் அவர்களை ஆசீர்வதித்து, அவருடைய தாயாகிய மரியாளை நோக்கி: இதோ, அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படத்தக்கதாக, இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும், விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும், இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும் என்றான்'' (லூக்.2:34,35).

சிமியோன் தீர்க்கதரிசனமாக அறிவித்த காரியங்களை மேற்குறிப்பிட்ட வசனங்களில் காண்கிறோம். அநேகர் கிறிஸ்துவைக் குறித்து இடறலடைவார்கள், விழுவார்கள், மற்றவர்கள் எழுவார்கள். ஒரு பட்டயம் மரியாளின் ஆத்துமாவை ஊடுருவும் என்கிறார். இங்கு கிறிஸ்துவின் மரணத்தைப்பற்றி சிமியோன் முன்னறிவிக்கிறார். அந்த கொடிய மரணத்தை மரியாள் கண்ணால் காணும் கொடிய வேதனையைப் பற்றியே, அவர் இப்படி ஒரு பட்டயம் ஆத்துமாவை ஊடுருவும் எனக் கூறுகிறார். சிமியோன் மேசியாவைப் பற்றியும் அவரது மரணம் பற்றியும், புறஜாதிகள் மேசியாவினால் ஆசீர்வாதமடைவது பற்றியும் அறிவிக்கிறார்.

## *சிமியோனின் வாழ்விலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடங்கள்*

1. ஆண்டவர் உண்மையுள்ளவர், அவர் கொடுத்த வாக்கை அவர் நிறைவேற்றுவார். எனவே நம்பிக்கையை தளரவிடாமல் விசுவாசத்தோடே காத்திருக்க வேண்டும்.

2. ஆண்டவர் பயன்படுத்துவதற்கு வயது ஒரு தடையல்ல. யோசேப்பு எகிப்தின் அதிபதியானபோது அவருக்கு வயது முப்பது. நாகமானை தேவஊழியனிடம் வழிநடத்தியது ஒரு சிறுமி. மோசே தேவ ஊழியத்திற்கு அழைக்கப்பட்டது 80 வயதில். காலேப் மலைப்பிரதேசத்தை கேட்டபோது அவரது வயது 85. வயது முதிர்ந்த சிமியோன் தாத்தாவை அந்த வயதிலும் ஆண்டவர் பயன்படுத்தினார். அவர் உங்களையும் பயன்படுத்துவார்.

3. பரிசுத்த ஆவியினால் நாம் வழிநடத்தப்படும்படி நம்மை முற்றிலும் அவர் ஆளுகைக்கு விட்டுக்கொடுப்பது அவசியம்.

4. ஆண்டவர் கொடுத்த தரிசனத்தோடு இலட்சியத்தோடு வாழ்வோம். அதற்கென்றே அர்ப்பணமாயிருப்போம். ஒருவேளை ஆண்டவர் உங்கள் வாழ்வில் வைத்திருக்கும் திட்டத்தை இலட்சியத்தை நீங்கள் இன்னும் அறியவில்லையென்றால் அதனை அவர் வெளிப்படுத்தும்படி முழுமையான விட்டுக் கொடுத்தலோடே ஜெபியுங்கள்.

5. இருளில் வாழும் ஜாதிகள் தேசங்கள் ஒளியாகிய கிறிஸ்துவைக் கண்டு கொள்ளும்படி நாம் ஏதாவது செய்யவேண்டும்.

**கிறிஸ்துமஸ் தொடர்புடைய பொருட்களைக் கண்டு வட்டமிடுக.**



மணி
பரிசு
பனித்துளி
பனி மனிதன்
வாழ்த்து அட்டை
கிறிஸ்துமஸ் மரம்
கிறிஸ்துமஸ் தாத்தா

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ணி | த் | னி | ம | க | இ | ழ | அ | ஃ | கி |
| ப | வா | ங | ணி | ச | ந | னி | ஈ | ஞ | றி |
| ரி | ழ் | ப | ம | ஆ | ப | ஔ | ஊ | ல | ஸ் |
| சு | த் | னி | உ | ப | னி | த் | து | ளி | து |
| ன | து | ம | வ | ய | உ | ண | த | ட | ம |
| ற | அ | னி | த | ஓ | எ | ஏ | ஐ | ர | ஸ் |
| ஐ | ட் | த | ஸ் | ண | ற | வ | ட | ஒ | தா |
| ஓ | டை | ன் | கி | ஏ | றி | ர | ஒ | எ | த் |
| கி | றி | ஸ் | து | ம | ஸ் | ம | ர | ம் | தா |

# கிருபை பெற்றவளே!

அநேக கல்விமான்கள், ஞானிகள், ராஜாக்களின் பிறப்பின் வரலாற்றைச் சரித்திரமாக நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் இயேசுகிறிஸ்துவினுடைய பிறப்பின் வரலாறோ மற்றெல்லா சரித்திர சம்பவங்களையும்விட வித்தியாசமும், அற்புதமுமானதொன்றாகும். ஆகவேதான் கடந்த 2000 ஆண்டுகளாக கிறிஸ்தவர்கள் அவரின் பிறப்பை ஞாபகார்த்தமாக, வருடா வருடம் கிறிஸ்துமஸ் பண்டிகையாக கொண்டாடி வருகிறார்கள். அவரவர் தங்கள் திராணிக்குத்தக்கதாக ஆசரித்து வருகின்றனர்.

இயேசுகிறிஸ்துவின் பிறப்பின் சரித்திரத்தில் அற்புதமான அம்சம் யாதெனில், அவர் ஓர் கன்னிகையின் வயிற்றில் உற்பத்தியாகி பிறந்ததேயாகும். இதைப்பற்றி ஏசாயா தீர்க்கதரிசி பின்வருமாறு கூறியுள்ளார்: ''இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்'' (ஏசா.7:14). இத்தீர்க்கதரிசனம் 2000 ஆண்டுகளுக்கு முன் நிறைவேறியது.

நம் ஆதித்தாயான ஏவாளின் கீழ்ப்படியாமையே, மனுக்குலத்தின் மீதான சாபத்திற்கு காரணமாய் அமைந்தது. ஏவாள் தேவ கட்டளையை மீறி பாவம் செய்தாள். ''பாவத்தின் சம்பளம் மரணம்'' (ரோம.6:23). இந்த மரணத்தை ஒழித்து நித்திய ஜீவனை மனுக் குலத்திற்குக் கொடுப்பதற்காக தேவ குமாரன் ஒரு கன்னிகையின் வயிற்றில் உருவாகுவதற்கு மரியாள் தேவவார்த்தைக்கு கீழ்ப்படிந்து தன்னை ஒப்புக்கொடுத்தாள்.

ஒருநாள் மரியாள் இருந்த வீட்டிற்குள் தேவதூதன் பிரவேசித்து: ''கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான். அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல்



எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள். தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய். இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது'' (லூக்.1:28-33) என்று கூறியபோது, ''இது எப்படியாகும்? புருஷனை அறியேனே'' என்றாள் மரியாள்.

''தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது' 'தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்றான். உடனே மரியாள்: ''இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்'' (லூக்.1:35-37).

மரியாளோ தேவனுடைய வார்த்தையை முற்றிலுமாய் நம்பி, அதற்குக் கீழ்ப்படிந்து, ஏவாளின் கீழ்ப்படியாமையினால் வந்த சாபத்தைப் போக்கும் தேவ குமாரனைப் பெற்றெடுத்தாள்.

கன்னிகையாகிய மரியாள் யோசேப்புக்கு மனைவியாக நியமிக்கப்பட்டிருக்கும்போதே கர்ப்பவதியானாள். கணவன் சந்தேகப்படுவான், உற்றார், உறவினர் நிந்திப்பார்கள், பரிகாசத்தையும், அவமானத்தையும் சந்திக்க நேரிடும் என்பதைப் பற்றியெல்லாம் பொருட் படுத்தாது தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, தன்னை முற்றிலுமாய் ஒப்புக் கொடுத்தாள். ''உமது வார்த்தையின்படி ஆகக் கடவது'' என்றாள். மரியாள் இவ்விதமாக தன்னை ஒப்புக்கொடுத்து தேவனின் வார்த்தையை விசுவாசித்தபடியினாலேயே ''விசுவாசித்தவளே பாக்கியவதி'' என்றும், ''ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்'' என்றும் ஒரு முறை தேவதூதனாலும், மறுமுறை எலிசபெத்தினாலும் வாழ்த்துதல் பெறும் சிலாக்கியத்தைப் பெற்றாள்.

கர்த்தருடைய வார்த்தை செவியில் தொனிக்கும்போது சாராளைப்போல நகைத்து, இருதயத்திலே சந்தேகிக்காது, மரியாளைப் போன்று ''உம் வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது'' என்று முற்றிலுமான கீழ்ப்படிதலுடனும், விசுவாசத்துடனும் நம்மைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பாலகனாகப் பிறந்த இயேசுகிறிஸ்துவை, இந்த கிறிஸ்துமஸ் காலங்களில் விசுவாசித்து ஏற்றுக்கொள்வோம். அவரே நம்முடைய பாவங்களை கல்வாரியில் நமக்காக இரத்தம் சிந்தி நம்மை மீட்டுள்ளார்.

கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாட உலகெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் பற்பல ஆயத்தங்களைச் செய்வது வழக்கம். வீட்டை அலங்கரிப்பதும், பல்சுவை உணவுகளைத் தயாரிப்பதும், புதிய ஆடைகளை அணிவதும், சிலர் குடித்து வெறித்து பண்டிகையை ரசிப்பதும் வழக்கம். ஆனால் நாம் இவ்விதமான உலகப்பிரகாரமாக அல்ல, ஆவிக்குரிய பிரகாரமாக கொண்டாட வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

இயேசுவின் பிறப்பின் அர்த்தத்தை உண்மையாக உணர்ந்து பண்டிகையை ஆசரிப்பதே மேன்மை. அப்போது மட்டுமே நாம் பண்டிகையின் உண்மையான இன்பத்தை அனுபவித்து மகிழக்கூடியதாக இருக்கும்.

அதுமட்டுமல்ல, நமது கொண்டாட்டம் புறமதஸ்தருக்கு சாட்சியாகவும் அமையும். இவ்விதம் கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாட தேவன்தாமே உங்களுக்கு அருள்புரிவாராக!

# எளிமையின் சின்னமாய் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த கிறிஸ்து

**இரண்டு படங்களுக்குமிடையே உள்ள 5 வேறுபாடுகளை கண்டுபிடிக்கவும்.**





விடைகள்: 1. ஜன்னல், 2. மேய்ப்பரின் தடி, 3. ஞானியின் உடை, 4. ஆட்டுக்குட்டி, 5. ஞானியின் தலைப்பாகை

# அவர் பெருகவும் நான் சிறுகவும்

திருமறையிலும் மகிழ்ச்சிக்கென்று ஒரு மனிதரை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அவர்தான் யோவான். அவரை யோவான் ஸ்நானகன் என்று நாம் அழைக்கிறோம். திருமுழுக்கு கொடுக்கும் யோவான் என்றும் சிலர் அழைப்பார்கள். இவரைப் பற்றி மாற்கு 1:6-8 ஆகிய வசன பகுதியில் பார்க்கிறோம். இந்த யோவான் ஒட்டக மயிர் உடையைத் தரித்து தன் அறையிலே வார்கச்சையைக் கட்டிக்கொண்டவனாக வெட்டுக் கிளியையும் காட்டுத்தேனையும் புசிக்கிறவனாயும் இருந்தார். இப்படிபட்ட ஒரு மனிதன் சந்தோஷமாய் இருக்க முடியுமா? அவனுடைய உடையைப் பாருங்கள். ஒட்டக மயிர் உடையைத் தரித்து, தன் அறையிலே வார்கச்சையைக் கட்டிக்கொண்டவன். இந்த நாட்களிலே, அநேகருடைய சந்தோஷம் எதைச் சார்ந்திருக்கிறது, தெரியுமா? உடையைச் சார்ந்திருக்கிறது. எந்த மாதிரி புடவையைக் கட்டிக்கொள்ளுகிறோம், எந்த மாதிரி சல்வார் அணிந்துகொள்ளுகிறோம், சுடிதார் அணிந்துகொள்கிறோம் என்பதைக் குறித்து சில பெண்களுக்கு சந்தோஷம். எந்த மாதிரி பேண்ட் அணிந்துகொள்ளுகிறோம், சர்ட் அணிந்துகொள்ளுகிறோம் என்பதைக் குறித்து சில ஆண்களுடைய சந்தோஷம். சில தம்பிமார்களுடைய சந்தோஷம்கூட அப்படித்தான் இருக்கிறது. தாங்கள் விரும்பின உடையை வாங்கி தரவில்லை என்றால் அப்பா, அம்மாவுக்கு அவர்கள் கொடுக்கிற உபத்திரவம் பெரியதாயிருக்கும். அன்பானவர்களே, மனநிறைவு, மனமகிழ்ச்சி இதையெல்லாம் சார்ந்திருக்காது. ஒன்று வாங்கிக் கொடுத்தால் அதைவிட மேலான ஒன்று வாங்கிக்கொடுக்க அடம்பிடிப்பார்கள் அல்லவா?

இன்னும் பாருங்கள், இவரைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? வெட்டுக்கிளியையும் காட்டுத் தேனையும் புசிக்கிறவனாய் இருந்தான். ஐயையோ, இதுவா? இதையா



சாப்பிடுவது? நல்ல ஓட்டலில் போய் பிரியாணி சாப்பிட்டால்தான் சந்தோஷமென சிலர் எண்ணுகிறதுண்டு. எங்க வீட்டுல எப்போது பார்த்தாலும் இரசமும் துவையலும்தான். நாங்க எங்க சந்தோஷமாய் இருக்கிறது? இப்படி குறைவுபடுகிறவர்களும் உண்டு. என் அருமையான சகோதரனே, நல்ல சாப்பாடு கொடுக்கவில்லை என்று சொல்லி உன் மனைவியை கடிந்துகொள்ளுகிறாயா? சகோதரியே, நீ கொடுக்கிற சம்பாத்தியத்துல, நீ கொடுக்கிற பணத்துல என்னத்த சமைத்துக் கொடுப்பது என்று கணவனிடத்திலே கேட்கிறாயா? சாப்பாட்டைச் சார்ந்திருப்பதில்லை சந்தோஷம்! அப்படியெல்லாம் இருந்திருந்தால் யோவான் ஸ்நானகன் சந்தோஷமாக இருந்திருக்க முடியுமா?

இவர் என்ன சொல்கிறார், பாருங்கள்: ''மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று'' (யோவான் 3:29) என்று கூறுகிறார்.

என் மகிழ்ச்சி நிறைவு பெற்றதென்று யோவான் ஸ்நானகன் பெருமிதத்தோடு கூறுகிறார். ஏன் யாராவது இவருக்கு சொத்து எழுதி வைத்துவிட்டார்களா? இல்ல, வேறு எங்கேயாவது விருந்து ஆயத்தம் பண்ணியிருக்கிறார்களா? அல்லது அழகான நல்ல ஆடை அணிந்து கொள்ளும்படி ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார்களா? இல்லை. எப்படி யோவானுடைய சந்தோஷம் நிறைவாயிற்று? அவனுடைய வாழ்க்கையிலே சுயம் ஆட்கொள்ளவில்லை, சுயம் அவரை நிறைக்கவில்லை. அவ்வளவுதான்!

நீர் யாரென்று அவரைக் கேட்கும்படி அவரிடத்தில் சிலரை அனுப்பினார்கள். அவர்கள் யார் தெரியுமா? பரிசேயர்களும் பிரதான ஆசாரியரின் ஆட்களும் ஆவர். யோவானிடத்தில் வந்து, ''நீர் யாரென்று கேட்கிறார்கள்''. யாராவது சிலரிடத்திலே வந்து, நீ யாரப்பா என்று கேட்டால் என்ன சொல்வார்கள், தெரியுமா? இல்லாததும் பொல்லாததெல்லாம் சொல்லி தங்களைப் பெரிய ஆளாய் காட்டிக்கொள்வர். இந்த நாட்களிலே இல்லாத பட்டங்களையெல்லாம் இருக்கிறது போல காட்டிக்கொள்கிறதில்லையா? அப்போதுதான் அவர்கள் மகிழ்ச்சியடைவர். ஆனால் இதெல்லாம் அல்ல; இதெல்லாம் இன்றைக்கு இருக்கும் நாளைக்கு போய் விடும். இவரிடத்திலே நீர் யார் என்று கேட்டபோது, அவர் என்ன சொல்லுகிறார் என்று யோவான் 1:20-23 இல் வாசிக்கிறோம்.

''அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டதுமன்றி, நான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்கையிட்டான். அப்பொழுது அவர்கள்: பின்னே நீ யார்? நீர் எலியாவா என்று கேட்டார்கள். அதற்கு: நான் அவன் அல்ல என்றான். நீர் தீர்க்கதரிசியானவரா என்று கேட்டார்கள், அதற்கும்: அல்ல என்றான். அவர்கள் பின்னும் அவனை நோக்கி: நீர் யார்? எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் உத்தரவு சொல்லும்படிக்கு, உம்மைக்குறித்து என்ன சொல்லுகிறீர் என்று கேட்டார்கள். அதற்கு அவன்: கர்த்தருக்கு வழியைச் செவ்வை பண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றான். அனுப்பப்பட்டவர்கள் பரிசேயராயிருந்தார்கள். அவர்கள் அவனை நோக்கி: நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, தீர்க்கதரிசியானவருமல்லவென்றால், ஏன் ஞானஸ்நானங் கொடுக்கிறீர் என்று கேட்டார்கள். யோவான் அவர்களுக்கு பிரதியுத்தரமாக: நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார். அவர் எனக்குப் பின்வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர்; அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல என்றான்''. (யோவான் 1:20-27).

இந்த யோவான் ஸ்நானகன் இயேசுவுக்கு உறவினர். இயேசுவைவிட வயதிலே மூத்தவர். அப்படியிருந்தும் அவர் தன்னைத் தாழ்த்தி, அவர் பெரியவர், நான் சிறியவன்

என்று தன்னைத் தாழ்த்தினார். அவருடைய காலின் செருப்பினுடைய வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரவான் அல்ல என்று சொல்லுகிறார். நான் கிறிஸ்து அல்ல என்று கூறுகிறார். உடனே கேட்கிறார்கள், பின்னே நீர் எலியாவா? அல்ல என்று அவர் கூறுகிறார். நீர் தீர்க்கதரிசியா எனக் கேட்டனர். நான் பெரிய தீர்க்கதரிசியாக்கும், நான் அந்த மரபிலே, அந்த வம்சத்திலே வந்தவன் என்று பெருமையாய் சொல்லியிருக்கலாம் அல்லவா? அப்போதும் அவர் அல்ல, அல்ல என்றுதான் சொல்லுகிறார்.

அருமையான சகோதரனே, முக்கியமாய் ஊழியத்தில் இருக்கும் உன்னிடத்தில் நான் ஒன்றைக் கேட்கிறேன், ஊழியத்திலே உனக்கு பெருமை தருவது எது? மனிதன் கொடுக்கும் பட்டங்களா? பாராட்டுகளா? புகழ் மாலைகளா? அல்ல. ஆண்டவர் பார்வையிலே நீ யார் என்பதுதான் உன்னை உயர்த்தி காட்டுவதாகும். உலகம் போகட்டும்; உனக்கு ஏன் அந்த வழி? யோவான் ஸ்நானகன் சொன்னார்: நான் எலியாவுமல்ல, நான் தீர்க்கதரிசியானவரும் அல்ல, பின்னே நீர் யாரைய்யா? என்று கேட்கிறார்கள். அதற்கு அவர்: நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றார். இதோ, மேசியா வருகிறார், சீக்கிரமாய் வருகிறார், நான் அவருக்கு முன்னோடி என்கிறார். அப்படி கூப்பிடுகிற ஒரு ஆளிடம் எவ்வளவு தாழ்மை பாருங்கள். தன்னை ஒன்றும் அற்றவனாக காட்டிக்கொள்ளுகிறார். அது மட்டுமல்ல, மணவாளர் அவர், நான் மணவாளனுடைய தோழன், என்று கூறுகிறார். அந்த சூழ்நிலையிலேதான் என்னுடைய சந்தோஷம் நிறைவு பெறுகிறது என்று யோவான் கூறினார்.

என்றைக்கு வாழ்க்கையிலே சுயத்தை மையத்தில் வைத்து நம்முடைய புகழையும், பெருமையையும் பெரிதுபடுத்துகிறோமோ, அன்றைக்கு சந்தோஷம் பாதிக்கப்படும். என்னுடைய சொந்த வாழ்க்கையின் அனுபவத்திலே நான் சொல்லுகிறேன். ஐயோ, எனக்கு கொடுக்கவேண்டிய மரியாதையை எனக்குக் கொடுக்கவில்லையே, நான் இங்கே கன்வென்ஷனுக்காக வந்திருக்கிறேன், நான் கூட்டம் நடத்த வந்திருக்கிறேன். என்னைக் கொண்டுபோய் ஒரு சின்ன அறையிலே போட்டுவிட்டார்களே? சாப்பாடுகூட சரியில்லையே, இதைப்பற்றியே நான் பேசிக் கொண்டிருந்தால் என் வாழ்க்கையிலே ஆசீர்வாத பெருக்கு இருக்குமா? ஜீவத்தண்ணீருள்ள நதிகள் என் உள்ளத்திலிருந்து பெருக்கெடுத்து ஓட முடியுமா? எல்லாம் வற்றிப்போகுமே? எல்லாம் உலர்ந்து போகுமே, வெறும் வாய் சத்தம் இருக்கலாம், ஆரவாரம் இருக்கலாம், ஆர்ப்பரிப்பு இருக்கலாம், ஆனால் ஆத்துமாக்களை இரட்சிப்பிற்கென்று தொடும் வல்லமை இல்லாமல் போகுமே. அவர் பெருகவேண்டும், நான் சிறுகவேண்டும். இது கர்த்தர் எனக்குக் கற்றுக்கொடுத்த பாடம். பொறாமையின் எண்ணம் என் உள்ளத்திலும் வந்ததுண்டு, ஐயோ, நான் சீர்குலைந்து போவேனோ என்ற அச்சமும் வந்ததுண்டு, ஆனால் அந்தவேளையில் எல்லாம் கர்த்தர் என்னை உறுதிப்படுத்தி, நிச்சயப்படுத்தி சொன்னது என்ன தெரியுமா? ''நான் உன்னை அழைத்தேன்; என் சித்தத்தை செய்வதிலேயே உன் கவனத்தை செலுத்து, என்னை பிரியப்படுத்துவதிலேயே உன் கவனத்தைச் செலுத்து'' என்று சொன்னார்.

கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் (கலா.2:20).

, எந்த சூழ்நிலையிலும் நான் சிறுகவேண்டும், கிறிஸ்து பெருகவேண்டும் என்று ஒப்புக்கொடுக்கும்போது நிச்சயமாய் நீங்கள் வாழ்வீர்கள்! மகிழ்ச்சி பெறுவீர்கள்!! உங்களை மேன்மேலும் எடுத்து பயன்படுத்துவார்!!!


ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
Elim
GLORIOUS REVIVAL CHURCH
happy
NEW YEAR
2024
DEC JAN
31 01
9PM - 4AM
2024
NEW YEAR
SERVICE
அபிஷேக நிறைந்த ஆராதனை | விடுதலையின் ஜெபம் | வல்லமையான தேவ வார்த்தை
பரிசுத்த திருவிருந்து உண்டு
இடம்
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
No.50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு,கோடம்பாக்கம்.
+919003067777,+919884908777,+919884916777ஸ

Elim GRC

# உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு

NOV 20TH
DEC 30TH

தினமும் மாலை
7.00 -8.30

ஏலிம் மகிமையான தேவாலயம்
நடத்தும்

# 40 நாள் ஆசீர்வாத சுத்திகரிப்பு ஜெபம்



- அபிஷேகம் நிறைந்த ஆராதனை
- வல்லமையான ஜெபம்
- பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்

PASTOR OSBORNE JEBADURAI

குடும்பமாய் கலந்துகொள்ளும்படி
அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்

50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் சென்னை-600024.
98849 08777, 90030 67777